**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 209/2018**

PW1 – கார்த்திகேயன் த/பெ பரமசிவம்
நாள்–06.01.2024

**குறுக்கு விசாரணை :**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனது தாயார் தான் வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தாயார் இறந்த காரணத்தினால் தான் 2 முதல் 9 வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞருக்கு எனது தாயார் தான் சொன்னார். என்ன விவரங்களை வழக்கறிஞரிடம் சொன்னார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்கள் தரப்பு வாதத்தை எதிர்வழக்குரையாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் எங்களின் அனுபவத்தையும், உரிமை மூலத்தையும் மறுத்துரைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எதிர் வழக்குரை மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் எங்களின் உரிமை மூலத்தை பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையில் தாவா சொத்தின் எங்களின் உரிமை மூலத்தை விளம்புகை செய்யக் கோரி திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எதன் அடிப்படையில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சம்மத பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.4 ல் தாவா சொத்திற்குண்டான ஆவணங்கள் தீ விபத்தில் எரிந்து போனதால் நாங்கள் இந்த சம்மத பத்திரம் எழுதிக்கொடுக்கிறோம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எந்த தேதியில் தீ விபத்து ஏற்பட்டது தீ விபத்துக்கான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது சம்மந்தமான குறிப்புகள் காணப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.4 ல் எந்த தேதியில் அன்னப்பூரணியின் சொத்துக்கள் வாய்மொழியான பிரித்துக்கொள்ளப்பட்டது என்றும் யார் யாருக்கு எந்தெந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்பதற்கான குறிப்பும் காணப்படவில்லை என்றால் சரிதான். யாருடைய பாகம் அன்னப்பூரணிக்கு ஒதுக்கப்பட்டது என்று வா.சா.ஆ.4-ல் காணப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டம்மாளின் பாகம் அன்னப்பூரணிக்கு ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள எங்கள் மூதாதையரான அன்னப்பூரணி அம்மாள் என்பதும், வா.சா.ஆ.4 எழுதி வாங்கிய எனது தாயாரும் ஒரே நபர்தான். தாவா சொத்து பட்டம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் 2வது பக்கத்தில் மூதாதையரான அன்னப்பூரணி என்பது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது . வா.சா.ஆ.4 ல் ஏற்பட்ட தட்டச்சு பிழை சம்மந்தமாக எங்கள் வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்கு மூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.4 ல் அடிப்படையில் தான் நாங்கள் தாவா சொத்தில் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்திலும் இல்லை என்றும் எங்கள் தாயாருக்கு அன்னப்பூரணி அம்மாள் எழுதிக்கொடுத்ததாக போலியாக ஆவணம் தயார் செய்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஐ எழுதிக்கொடுத்த சண்முகம், சீனிவாசன், கோபாலகிருஷ்ணன் மற்றும் மணிமேகலை ஆகியோர்கள் யார் என்றால் தாவா சொத்தின் உரிமையாளரான பட்டம்மாளின் வாரிசுகள் ஆகும். வா.சா.ஆ.4 ஏற்பட்ட காலத்தில் பட்டம்மாள் உயிருடன் இருந்தாரா அல்லது இறந்துவிட்டாரா என்பதற்கான எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் உள்ள நான்கு நபர்கள் மட்டுமே பட்டம்மாளின் வாரிசுதாரர்கள் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.4 படி எனது தாயார் தாவா சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அசையா சொத்தின் மதிப்பு 100 ரூபாய்க்கு மேல் இருப்பின் அதை பதிவு செய்ய வேண்டுமென்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் பெற்றதாக சொல்லும் தாவா சொத்தின் கிரயப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படாததா என்றால் பதிவு செய்யப்படாதது ஆகும். எங்கள் தாயாருக்கும் வா.சா.ஆ.4 -ல் குறிப்பிட்டுள்ள நான்கு நபர்களுக்கும் இடையே எவ்வித கிரய ஆவணமும் ஏற்படவில்லை என்றும், அதனால்

தான் பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டம்மாள் பெயரில் எதாவது பதிவு செய்யப்பட்ட ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பட்டம்மாளுக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பட்டம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பட்டம்மாளுக்கு பாத்தியப்பட்டதில்லை என்பதை பிரதிவாதிகள் மறுக்கும் பட்சத்தில் அதை ஆவணங்களின் அடிப்படையில் மறுக்க இயலாது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ன் அடிப்படையில் தாவா சொத்தில் எங்கள் தாயாருக்கு எவ்வித உரிமை மூலம் ஏற்படுவதில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.